# பாடம் 12: மோசே
# (ஒரு தேசத்துடனான உடன்படிக்கை 2)

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

| | |
|---|---|
| அடிப்படை நிலை (7 வயது) | : 1 முதல் 15 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| இடைப்பட்ட நிலை (10 வயது) | : 1 முதல் 15 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| மேம்பட்ட நிலை (13 வயது) | : 1 முதல் 16 கருத்துகளைக் கற்பிக்கவும் |

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**

முந்திய பாடத்தில், யாக்கோபின் மகன்களின் வழிமரபினர் எகிப்தில் அடிமை வேலைகள் செய்யக் கட்டாயப்படுத்தப்பட்டனர் என்பதை நாம் கற்றோம். கடவுள் அவர்களின் கூக்குரலைக் கேட்டு, அவர்களை அடிமைத்தனத்தில் இருந்து விடுவிக்க, அவர்கள் நடுவிலிருந்து ஓர் இறைவாக்கினராக மோசேயை எழுப்பினார். எகிப்தில் இருந்து வெளியேறிய அவர்கள் கடவுளால் பிரிக்கப்பட்ட செங்கடலின் நடுவே உலர்ந்த தரையில் பாதுகாப்பாகக் கடந்து, தற்போது சீனாய் பாலைநிலத்தில் உள்ளனர். இந்த பாடத்தில், அவர்கள் பாலைநிலத்தில் அலைந்து திரிந்தபோது கடவுள் எப்படி பராமரித்தார் என்பதைப் பற்றி நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**

1. கடவுள் இஸ்ரயேலரை எகிப்திய அடிமைத்தனத்தில் இருந்து விடுவித்தப் பிறகு, அவர்கள் நீண்ட காலமாக பாலைநிலத்தில் அலைந்து திரியும் நிலை ஏற்பட்டது. அவர்கள் பழைய எகிப்திய வாழ்க்கை முறையில் இருந்து திரும்பி, கடவுளின் மக்களுக்குரிய அடையாளத்தைத் தழுவிக் கொள்வதற்கு கற்பிக்கும் காலமாக கடவுள் இதைப் பயன்படுத்தினார். எகிப்தில் இருந்து மக்களை வெளியேற்றியதை விட மக்களிடம் இருந்து எகிப்தை வெளியேற்றுவது கடினமாக இருந்தது! நாற்பது ஆண்டுகள் கழித்தே அவர்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் நுழைந்தனர்.

2. அவர்கள் பல ஆண்டுகளாக விலங்குகளை விடவும் மோசமாக நடத்தப்பட்டதால், அவர்கள் மீண்டும் எப்படி சரியான மனிதர்களாக நடந்துகொள்வது என்பதை அவர்களுக்கு கற்பிக்கும் தேவை கடவுளுக்கு இருந்தது. அவர்கள் மனிதர்களாக எப்படி இருப்பது என்பதை மட்டும் கற்பிப்பதைத் தாண்டி, தமது மக்களாக அவர்களை வாழச் செய்திட அவர் விரும்பினார். ஆனால் அவர்கள் பயங்கரப் பிடிவாதமுள்ள மக்களாக இருந்ததால் அவர்களுக்கு கற்பிக்கும் அலுவல் மோசேக்கு மிகக் கடினமாக இருந்தது. அவர்கள் கடவுளுக்கும் மோசேக்கும் எதிராக அடிக்கடி புகார் கூறினர், மோசே வழியாக கடவுள் வழங்கிய அறிவுறுத்தல்கள் மற்றும் சட்டங்களைப் பின்பற்ற மறுத்தனர். அவர்களால் கடவுளிடம் நம்பிக்கை கொள்ள இயலவில்லை.

அவர்கள் அத்துமீறி நடந்த பொழுதெல்லாம், கடவுள் அவர்களைத் தண்டித்து ஒழுங்குப் படுத்தினார். அவர்கள் பின்னர் மனந்திருந்தி, தங்களுக்காக கடவுளின் மன்னிப்பை வேண்ட மோசேயிடம் கேட்டனர், (ஆனால் அவர்கள் சரியானதைக் கற்க வேண்டும் என்பதற்காக, தங்கள் பாவச் செயல்களின் பின்விளைவுகளை அனுபவித்தப் பிறகே) கடவுள் எப்பொழுதும் அந்த மன்னிப்பை வழங்கினார்.

3. அவர்களின் பாவச் செயல்களுக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு கானானின் எல்லையில் அவர்கள் மோசேக்கும் கடவுளுக்கும் எதிராகச் செய்த கிளர்ச்சியாகும் (எண்ணிக்கை 13-14). அவர்கள் எகிப்தில் இருந்து வெளியேறியச் சில ஆண்டுகளுக்குப் பிறகு, கடவுள் அவர்களை தாம் வாக்களித்த நாடாகிய கானானின் எல்லைக்கு நடத்திச் சென்றார். அந்நாட்டை உளவு பார்க்க மோசே பன்னிரு ஒற்றர்களை அனுப்பினார். நாற்பது நாட்கள் கழித்து, பன்னிரு ஒற்றர்களில் (யோசுவா மற்றும் காலேபு தவிர்த்த) பத்து பேர், அந்நாட்டில் வாழ்வோரை விட இஸ்ரயேலர் மிகவும் வலிமை குன்றியவர்களாக இருக்கின்றனர் என்று தெரிவித்தனர். மக்கள் உடனடியாக அவர்களின் மிகைப்படுத்தலை நம்பி மோசேக்கும் கடவுளுக்கும் எதிராகக் கிளர்ச்சி செய்தனர். இதன் விளைவாக, வாக்களிக்கப்பட்ட கானான் நாட்டிற்குள் நுழையும் முன்பாக கடவுள் அவர்களை நாற்பது ஆண்டுகள் பாலைநிலத்தில் அலைந்து திரியச் செய்தார்.

நாற்பது ஆண்டுகள் முடிவடைய இருந்த வேளையில், தங்கள் நீண்டப் பயணத்தால் களைப்புற்றிருந்த இஸ்ரயேலர் மீண்டும் ஒருமுறை மோசேக்கு எதிராகப் பேசினர். அவர்கள்

பாலைநிலத்தில் வெறுப்புற்ற உணவாலும் போதுமானத் தண்ணீரின்றியும் வாழ்வு மோசமாக உள்ளதாகப் புகார் கூறினர். அவர்களின் நன்றியின்மைக்குத் தண்டனையாக, அவர்களைக் கடிக்குமாறு கடவுள் நச்சுப் பாம்புகளை அனுப்பினார், அவர்களில் பலர் இறந்தனர். அவர்கள் அச்சமுற்றதும், மோசேயிடம் உதவி வேண்டிக் கெஞ்சினர், தங்களிடம் இருந்து பாம்புகளை அகற்றி விடுமாறு ஆண்டவரிடம் செபிக்க அவரைக் கேட்டனர். மோசே செபித்ததும், ஒரு வெண்கலப் பாம்பைச் செய்து கம்பம் ஒன்றின் உச்சியில் வைக்குமாறும், கடியுண்டோரில் அதைப் பார்க்கும் எல்லாரும் நலமடைவர் என்றும் கடவுள் அவரிடம் சொன்னார். கடவுள் வாக்களித்தபடியே, வெண்கலப் பாம்பைப் பார்த்தபோது கடியுண்டோர் மீண்டெழுந்தனர்.

கடவுள் பாலைநிலத்தில் இஸ்ரயேலரை நடத்தியக் காலம் முழுவதும் அவர்கள் மனப்போக்கு அத்தகையதாய் இருந்தது. கடவுளை நம்புகின்ற மற்றும் எகிப்திய அடிமைத்தனத்தில் இருந்து அவர் விடுவித்துக் கொணர்ந்ததற்கு நன்றியுள்ள மனப்போக்கு அவர்களிடம் இல்லை. அவர்கள் பல அற்புதங்களைக் கண்டிருந்தாலும், தொடர்ந்து வாழ்வின் சிரமங்கள் மற்றும் சாத்தியமின்மைகளில் கவனம் செலுத்தியதன் விளைவாக, கடவுளையும் மோசேயையும் தொடர்ந்து குறை கூறிக் கொண்டிருந்தனர்.

4. ஆனால் கடவுள் அவர்களை விட்டுவிடவில்லை. அவர் அவர்களோடு தொடர்ந்து இருந்தார், அவர்களை நிலையாக வழிநடத்தி, வாழ்வுக்கான அறிவுறுத்தல்களை அவர்களுக்கு வழங்கினார். அவர் எல்லா வழியிலும் பகலில் மேகத் தூணாகவும் இரவில் நெருப்புத் தூணாகவும் அவர்களுக்கு முன்பாகச் சென்றார் (விப 13:21-22). அவர்களது வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் அவர் தமது பராமரிப்பை உறுதி செய்தார், அவர்கள் கடவுளுக்கு கீழ்ப்படிந்து அவரது அறிவுறுத்தல்களைப் பின்பற்றினால் எல்லாம் சரியாக இருக்கும்.

5. கடவுள் அவர்களின் **உணவிலும் பானத்திலும் அக்கறை** கொண்டிருந்தார். மாராவில், காணப்பட்டத் தண்ணீர் குடிப்பதற்கு மிகவும் கசப்பாக இருந்தது. ஆனால் மோசே ஒரு மரத் துண்டை வீசியதும் அது அவர்களுக்காக அந்தத் தண்ணீரை இனிமையாக மாற்றியது (விப 15:23-26). அவர்கள் தங்களுக்குப் பசிப்பதாகக் கூறியதும், கடவுள் அவர்களுக்கு உணவு அளிப்பதாக வாக்களித்தார். அன்றைய மாலையில், பெருமளவிலான காடைகள் (பறவைகள்) அவர்களின் முகாமுக்குப் பறந்து வந்தன (விப 16:1-13, எண் 11:4-32). ஒவ்வொரு காலையும், அவர்கள் உண்பதற்கு கடவுள் மன்னாவை வழங்கினார், அது சிறிய வெண்ணிற விதையாக பார்க்க நிலத்தின் மீதிருந்த உறைபனி போன்றிருந்தது, மேலும் தேனால் செய்த அப்பங்கள் போன்று சுவையாக இருந்தது (விப 16:14-36).

6. கடவுள் அவர்களுக்கு **எதிரிகளிடம் இருந்து பாதுகாப்பு** அளித்தார். ரபிதிமில், அவர்களை அமலேக்கியரின் பெரும்படை ஒன்று தாக்கியது. மோசே ஒரு மலையின் உச்சியில் ஆண்டவரை நோக்கி கைகளை உயர்த்தி நாள் முழுவதும் செபித்தவாறே சண்டைப் பார்த்துக் கொண்டிருந்தார். யோசுவாவின் படைகளுக்கு கடவுள் வெற்றியைக் கொடுத்தார், தாங்கள் தோற்கடித்த அமலேக்கியரிடம் இருந்து இஸ்ரயேலர் பெருமளவில் ஆயுதங்களையும் கவசங்களையும் எடுத்துக் கொண்டனர். (விப 17:8-14)

7. கடவுள் அவர்களுக்கு **நல்லத் தலைமை**யை வழங்கினார். இஸ்ரயேலர் மிதியானைக் கடந்து சென்றபோது மோசேயைச் சந்தித்த அவரது மாமனார் இத்திரோவின் அறிவுரைப்படி, இஸ்ரயேலரின் சிறியக் குறைகளைக் கேட்க மோசே நீதித்தலைவர்களை நியமித்தார், அதனால் மோசே சிறியப் புகார்களில் நேரத்தை வீணாக்காமல் மிக முக்கிய விடயங்களில் கவனம் செலுத்த முடிந்தது (விப 18:13-27, இச 1:9-18). பின்னர், தேசத்தை நடத்திச் செல்லும் சுமையைத் தாங்க மோசேக்கு உதவியாக 70 மூப்பர்களின் குழு நியமிக்கப்பட்டது (எண் 11:16-17).

கடவுள் இஸ்ரயேல் மீதான தலைமையின் வாரிசுக்கும் திட்டம் வைத்திருந்தார். மோசே இஸ்ரயேலருக்காக கடவுளைச் சந்திக்க சீனாய் மலையில் ஏறிய நேரத்தில் இருந்தே, அவரது இளம் உதவியாளர் யோசுவா அவரோடு இருந்தார் (விப 24:12-13). “மனிதர் தமது நண்பரோடு பேசுவது போன்று” ஆண்டவரோடு பேச மோசே கூடாரத்திற்குள் சென்ற பொழுதும், யோசுவா அவரோடு இருந்தார் (விப 33:9-11). அடிக்கடி, மோசே கூடாரத்தை விட்டு வெளியேறியப் பிறகும், ஆண்டவரோடு பேச யோசுவா அதனுள் இருந்தார். இஸ்ரயேலில் மற்ற எவரையும் விட மோசேயின் கடவுளுடனான உறவுநிலையில் அருகிருக்க யோசுவா சிறப்புச் சலுகைப் பெற்றிருந்ததாகத் தெரிகிறது. இவை எல்லாம் மோசேயின் வாரிசாக யோசுவாவை ஆக்கும் கடவுளின் திட்டத்தைக் குறிக்கின்றன (எண் 7:15-23). இதனாலே, வாக்களிக்கப்பட்ட நாடான

கானானில், பாலும் தேனும் வழிகின்ற நாட்டில் நுழைவது குறித்த அறிவுறுத்தலை கடவுள் வழங்கியபோது, அவர் யோசுவாவை அருகிருக்கச் செய்தார் (விப 33:1-23).

8. கடவுள் அவர்களுக்கு **வாழ்வுக்கானச் சட்டங்களை** வழங்கினார். அவர்களுக்காக கடவுள் செய்த அனைத்திற்காகவும், இஸ்ரயேலரை என்றென்றும் தமது மக்களாக இருக்குமாறு, தமது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையோடு அவர் அழைத்தார். மக்கள் தொலைவில் இருக்க, மோசே ஆறு ஆண்டுகளுக்கு முன்பு எரியும் முட்புதரில் கடவுள் தோன்றிய சீனாய் மலையின் மீது மூடியிருந்த அடர்ந்த மேகத்திற்குள் அவரைச் சந்திக்க நுழைந்தார். இந்த மலையில் மோசேக்கு கடவுள் பத்துக் கட்டளைகளை வழங்கினார் (விப 20:1-17). பத்துக் கட்டளைகளை மக்களுக்கு வழங்க இறங்கி வந்தப்பிறகு, மக்களுக்காக விரிவான அறிவுறுத்தல்களை கடவுளிடம் இருந்து பெறுவதற்காக மோசே மீண்டும் மேலே ஏறிச் சென்றார் (20:19 - 23:33). மொத்தத்தில், கடவுளின் செய்திகளை இஸ்ரயேலருக்கு வழங்கவும் கடவுள் தமக்கு கூறியவற்றை நிறைவேற்றவும் மோசே குறைந்தது ஏழு முறை சீனாய் மலையில் ஏறி இறங்கினார்.

9. கடவுள் அவர்களுக்கு ஒரு **பொருளாதார முறைமை**யை வழங்கினார், அது நீதி மற்றும் இரக்கத்தின் சட்டத்தின் அடிப்படையில் இருந்தது (இச 15:1-10). ஒவ்வொரு ஏழாம் ஆண்டின் முடிவிலும் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட வேண்டும். அவர்கள் ஒருவர் மற்றவருக்காகக் கொடுப்பதிலும் செலவிடுவதிலும் தாராளமாக இருக்க வேண்டும். தாராளமாகக் கொடுப்போர் தங்கள் கைகளின் உழைப்பு அனைத்திலும் ஆசிகளை வாக்குறுதியாகப் பெற்றனர்.

10. கடவுள் அவர்களுக்கு **கல்வி** நுட்பங்களைக் கற்பித்தார் (இச 11:18-21). பெற்றோர்கள் தங்களது குழந்தைகளுக்கு அவரது நியமங்களைக் குறித்து நாள்தோறும் பேசுவதன் வழியே அவற்றைக் கற்பிக்க வேண்டும். அவர்கள் இந்த நியமங்களைத் தங்களது வீடுகளின் கதவு நிலைகளிலும் வாயில்களிலும் எழுதிவைக்க வேண்டும், அதனால் அவர்களின் குழந்தைகள் ஒவ்வொரு நாளும் தங்களது வீடுகளில் நுழையும் மற்றும் வெளியேறும் பொழுது அவற்றை நினைவூட்டப் பெறுவர். அடுத்தத் தலைமுறையினருக்கு கடத்துவதை உறுதிசெய்ய விரும்பி, தங்களது பெற்றோருக்கு கடவுள் கொடுத்தச் சட்டங்களைக் குழந்தைகள் நினைவில் கொள்வதை உறுதி செய்வதற்காக இவ்வாறு செய்ய வேண்டும்.

11. கடவுள் அவர்களுக்கு **நலவாழ்வு**க்கான விதிமுறைகளை வழங்கினார். கடவுளால் வழங்கப்பட்டச் சட்டங்கள் அவர்களிடம் உடல் சார்ந்த தூய்மையைக் கோரின, மேலும் அவர்கள் தீட்டான பொழுது தங்களைத் தூய்மைப்படுத்தும் செயல்முறைகளும் இருந்தன (லேவியர் 15). மக்கள் பாளையத்தில் இருந்து வெளியேறி மலம் கழிக்கச் செல்லும் பொழுது, நிலத்தில் ஒரு குழிதோண்டி கழித்துவிட்டு அதை மீண்டும் மண்ணால் மூட வேண்டும் (இச 23:12-13). மக்கள் தொற்றக்கூடியத் தோல் நோயால் பாதிக்கப்பட்டால் சில குறிப்பிட்ட விதிமுறைகளைப் பின்பற்றி, சில தூய்மைச் சடங்குகளைச் செய்ய வேண்டும் (லேவி 14:1-32). இறந்த உடல்களைத் தொடுவோர் நோயைத் தவிர்ப்பதற்கான விதிமுறைகளும் மக்களுக்கு வழங்கப்பட்டன (எண் 19:1-16).

12. கடவுள் அவர்களுக்கு **குடும்ப உறவுநிலைகளை** முறைப்படுத்தும் சட்டங்களையும் வழங்கினார் (லேவி 18:5-24). குடும்பத்தில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் கடவுள் வழங்கிய இயல்பானப் பங்கிற்கு முரணானத் தகாத உறவுநிலைகள் எதுவும் குடும்ப உறுப்பினர்களின் நடுவே இருக்கக்கூடாது. குழந்தைகள் தங்களின் பெற்றோரை மதிக்க வேண்டும் (விப 20:12).

13. மிக முக்கியமாக, கடவுள் அவர்களின் **உண்மை கடவுள் வழிபாட்டை** மீட்டெடுத்தார். எகிப்தில் இருந்த ஆண்டுகளில் இஸ்ரயேல் மக்கள் சிலைவழிபாட்டினராக மாறியிருந்தனர் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவர்கள் ஒரே உண்மை கடவுளை வழிபடுவோராக மாற வேண்டுமென கடவுள் விரும்பினார். கடவுள் தமது மக்களின் நடுவே தங்குவதற்காக தூயகம் ஒன்றைக் கட்டுமாறு மோசேயிடம் அவர் அறிவுறுத்தினார் (விப 25:1-40, 40:16-21). இந்தத் தூயகத்தில் வெளிப்பகுதி சந்திப்புக் கூடாரம் என்று அழைக்கப்படும், அது ஆட்டுக்கிடாயின் தோல்களால் செய்யப்பட்டு, கடற்பசுக்களின் பதனிட்டத் தோல்களால் மூடப்பட்டிருந்தது (விப 26:1-37). சந்திப்புக் கூடாரத்தின் மையத்தில் திருஉறைவிடம் இருக்க வேண்டும், மெல்லிய நார்ப்பட்டு மற்றும் மதிப்புமிகு நூல்களால் உருவான மூடுதிரைகளால் திருத்தூயக அமைப்பை ஏற்படுத்தியது. இந்தத் திருத்தூயகத்திற்குள், மூடுதிரைகளால் மறைக்கப்பட்டு உடன்படிக்கைப் பேழை (பொன்னால் வேயப்பட்ட இந்த மரப்பேழையில் பத்துக் கட்டளைகள் பொறித்த இரு கற்பலகைகள் இருந்தன) காணப்பட்டது, தூயகம் முழுவதிலும் இது மிகவும் முக்கியமானது. திருஉறைவிடத்தில் பொன்வேய்ந்த மேசையில் புளிக்காத பன்னிரு அப்பங்களும் ஏழு

திரிகளைக் கொண்ட விளக்குத்தண்டும் இருந்தன. இந்த சந்திப்புக் கூடாரம் நகர்த்தப்பட வேண்டும், அதனால் மக்கள் பாலைநிலத்தில் அலைந்து திரிந்த வேளையில் எங்கும் எடுத்துச் செல்லும் வகையில் இருந்தது. அவர்கள் பாளையம் அமைத்த இடங்களில், கூடாரத்திற்குள் உடன்படிக்கைப் பேழை வைக்கப்பட்டது.

ஒரு பெரிய வெண்கலப் பலியிடும் பீடம் மற்றும் சிறிய பொன் வேய்ந்த தூபப்பீடம் என நான்கு கொம்புகளை உடைய இரண்டு பீடங்களைக் கட்டுவது குறித்த விதிமுறைகளையும் மோசே பெற்றார். சந்திப்புக் கூடாரத்தில் பணிபுரிய லேவியர்கள் பிரித்து வைக்கப்பட்டனர் (எண் 1:47-50, 8:1-26). குருக்கள் (லேவியரான ஆரோனும் அவரது மகன்களும்) கூடாரத்தில் நுழையும் முன்பாகத் தங்களைத் தூய்மைப்படுத்த வெண்கலக் கிண்ணம் வைக்கப்பட்டது. நார்ப்பட்டு "ஏப்போது" (தோள்ப்பட்டைகளில் பொன்னிழையும், இஸ்ரயேலின் பன்னிரு குலங்களின் பெயர் பொறித்த மணிக்கற்களும் பதித்த மேலுடை), பொன் மற்றும் நார்ப்பட்டால் ஆன மார்புப்பட்டை, நீலநிற அங்கி, கோடிட்ட உள்ளாடை, நார்ப்பட்டு தலைப்பாகை, இடைக்கச்சை குருக்களின் ஆடைகள் ஆகும் (விப 27-30, 35-39).

பாவக் கழுவாய் நாள் (யோம் கிப்பூர்) ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் இறுதியில் கடைபிடிக்கும் வகையில் நிறுவப்பட்டது. இந்த நாளில், தலைமைக் குரு தமது மற்றும் பிற குருக்களின் பாவங்களுக்காக ஒரு காளையைப் பலியிடுவார். பின்னர், இஸ்ரயேலர் எல்லாரின் பாவங்களுக்காக ஓர் ஆட்டுக்குட்டி பலியிடப்படும். அதனோடு, மற்றொரு வெள்ளாட்டின் தலை மீது மக்கள் அனைவரின் பாவங்களும் அடையாளமாகத் தலைமைக் குருவால் சுமத்தப்படும். மக்கள் பாவங்களை அகற்ற இந்தப் போக்குஆடு பாலைநிலத்தில் விடப்படும். (லேவி 16)

14. ஆண்டவர் ஒருபோதும் அவர்களை விட்டு விலகவில்லை. அவரது நிகழ்மை (ஷெக்கினா) கூடாரத்தின் மீது பகலில் மேகமாகவும், இரவில் நெருப்பாகவும் தங்கியிருந்தது. இது வரையறுக்க முடியாத காலத்திற்கு, "இரு நாட்கள், ஒரு மாதம், அல்லது ஓர் ஆண்டு" நீடித்தது. அது கூடாரத்தில் இருந்து மேலெழுந்த பொழுதெல்லாம், அது நகர்வதற்கான நேரம் என்பதை இஸ்ரயேலர் அறிந்து கொண்டனர் (விப 40:34-38, எண் 9:22).

15. கடவுள் நம்பகமாக இவ்வாறு பராமரித்து வந்தாலும், இஸ்ரயேல் மக்கள் தங்களது சிலை வழிபாட்டு வழிகளில் இருந்து ஒருபோதும் வெளியே வரவில்லை. ஒருமுறை மோசே 40 நாட்கள் சீனாய் மலையில் இருந்தபோது, மக்கள் பொறுமையிழந்து அவருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ய முடிவெடுத்தனர் (விப 32:1-35). அவர்கள் எகிப்தில் விட்டுவந்த முற்காலத் தெய்வங்களை வழிபட விரும்பினர். மோசேயின் சகோதரர் ஆரோன் பொன்னால் ஒரு காளைக் கன்றின் உருவத்தைச் செய்து கொடுக்க, மக்கள் அதற்கு பலி செலுத்தினர். மோசே பத்துக் கட்டளைகளின் கற்பலகைகளுடன் பாளையம் திரும்பிய வேளையில், அவர் ஆவேசமாக கற்பலகைகளை வீசியெறிந்து காளைக்கன்றின் சிலையை அழித்தார். அவர் ஆயுதமேந்திய லேவியர்களை அனுப்பி ஒழுங்கை மீட்டெடுக்கச் செய்தார். அதன்பிறகு, சீனாய் மலை மீது மீண்டும் ஏறிய மோசே வேறு இரண்டு கற்பலகைகளில் பத்துக் கட்டளைகளைப் பெற்று வந்தார் (விப 34:1-35). அவர் திரும்பி வந்தபோது, அவரது முகம் கடவுளின் மாட்சியால் ஒளிர்ந்தது.

16. நன்றியின்மையே பாவம் நிறைந்த மனித இதயத்தின் இயல்பான நிலை. பல மக்களிடம் வாழ்வு குறித்த புகார்கள் என்னவென்று நீங்கள் கேட்டால், அவர்களில் பெரும்பாலானோர் அடுக்கடுக்கான குறைகளைப் பகிர்வர். வாழ்வில் எதற்காக நன்றி சொல்வர் என்று கேட்டால், எதற்கு நன்றி சொல்ல வேண்டும் என்பதை யோசிக்க அவர்களுக்கு சிறிது நேர அமைதி தேவைப்படும். இந்தப் பிரச்சனைக்கான காரணம் பாவமே ஆகும். முற்கால இஸ்ரயேலர்களைப் போன்று, முறுமுறுப்போர் மற்றும் குறைகூறுவோரால் நிறைந்துள்ளது. கடவுள் அவர்களுக்கு எவ்வளவு செய்திருந்தாலும், அவர்களை நன்றியுள்ளவர்களாக மாற்ற அது போதுமானதாக இருக்காது. உண்மையில் இஸ்ரயேலர் தம்மை நோக்கி எழுப்பியக் கூக்குரலைக் கேட்டு, அவர்களை அடிமைத்தனத்தில் இருந்து விடுவிக்க கடவுள் எல்லாம் செய்தபிறகும், பாலைநில வாழ்வு கடினமாக இருந்ததால், எகிப்திற்கு அடிமைகளாகத் திரும்பிச் செல்வதே அவர்களுக்கு நல்லதாகத் தெரிந்தது (எண் 14:2-4)! இது கடவுளுக்கு எரிச்சலூட்டுவதாக இருந்தாலும், அவர் தொடர்ந்து அவர்களோடு பொறுமையாகவும் நம்பகமாகவும் இருந்தார்.

நன்றியற்று இருப்பது கிளர்ச்சி செய்வதன் ஒரு வடிவமாகும். நமது வாழ்வில் எல்லா விடயங்களும் நாம் விரும்புவது போன்று நடக்காததை நாம் உணர்வது இயல்பானது, ஆனால் தொடர்ந்து அவற்றைப் பற்றிக் குறைகூறுவதும், நன்றியின்மையின் வழிக்கு நம்மைத் தாழ்த்தி

நமது குடும்பங்கள் மற்றும் நம்மை அன்பு செய்வோரிடமும், நாம் நன்றியுள்ளவர்களாக இருப்பதற்கான மற்ற பல ஆசிகளை நமக்கு வழங்கிய கடவுளிடமும் கொடூரமாக நடக்கச் செய்ய அவற்றை அனுமதிப்பதும் நிறைவின்மையின் வெளிப்பாடு. நன்றியின்மையில் இருந்து நமது இதயங்களை விலக்கி வைக்க, நமது வாழ்வில் நம்மால் நன்றி சொல்ல முடிந்த ஒவ்வொரு விடயத்தையும் சிந்தித்துப் பார்க்க நாம் ஒவ்வொரு நாளும் நேரம் எடுத்துக்கொள்ள வேண்டும். நமது செபங்களில், கடவுளின் பராமரிப்பு மற்றும் ஆசிகளுக்காக நாம் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். நமது குடும்பங்களை நோக்குகையில், அவர்கள் நிறைவற்றோராய் இருந்தாலும் அவர்கள் நமக்காக வழங்கிய இல்லத்திற்காக நாம் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.